அவசரக் கூட்டம்

**கூட்ட எண் – 01/ 2022**

**திருத்தணி நகராட்சி,**
**நாள்: 04.03.2022**

நிகழும் பிலவ ஆண்டு, மாசி – 20, திருவள்ளுவர் ஆண்டு 2052 நாள்.04.03.2022 வெள்ளிக் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் அவசரக் கூட்டத்தில் நகர மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

B. Saraswathi

**நகர மன்ற தலைவர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

திருத்தணி நகராட்சி நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

தமிழகத்தில் நடைபெற்ற 16வது சட்டமன்ற பொதுத்தேர்தலில் **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களை, தமிழ்நாட்டின் முதலமைச்சராக அமர்த்திய வாக்காள பெருமக்களுக்கு இந்நகர மன்றம் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற நகர்புற உள்ளாட்சி தேர்தலில் **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின்** நல்லாட்சிக்கு அங்கீகாரம் அளித்து மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஆகியவற்றில் போட்டியிட்ட வேட்பாளர்களில் 90% இடங்களில் வெற்றிப்பெற வைத்த வாக்காள பெருமக்களுக்கு, இந்நகர மன்றம் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

மேலும் திருத்தணி நகரின் வளர்ச்சிக்காக **கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில்** புதியதாக பேருந்து நிலையம் அமைக்க ரூ.15.00 கோடி ஒதுக்கீடு செய்து உத்திரவிட்ட **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கு இந்நகர மன்றம் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.